**சார்பு நீதிமன்றம், செஞ்சி**

**அ.வ.எண்.271/2022** **நாள்.09.01.2025**

2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 9-ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | தொழில் | |
| த.பெ/க.பெ. | ஏழுமலை | சாதி | |
| கிராமம் | செஞ்சி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 63 |

**வா.சா.1**

**குறுக்கு விசாரணை**

இஸ்மாயில் (ஷா) பகீர் தர்காவின் முன்னாள் முத்தவல்லி ஷாஜகான் என்பவரை எனக்கு தெரியும். ஷாஜகான் என்பவர் தான் வாரசந்தையை நிர்வாகம் செய்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஷாஜகான் அவர் நிர்வாகம் செய்துவந்த காலத்தில் பலஉறுப்பினர்களிடம் நிர்வாகத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை சரிசெய்ய வெற்று புரோநோட்டில் கையொப்பம் பெற்று வைத்திருந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை படித்துபார்த்தீர்களா என்றால் படித்துபார்த்தேன். அந்த எதிர்வழக்குரையில் தற்போது கூறியுள்ள விவரங்களை தான் ஆட்சேபணையாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஷாஜகான் இறப்பதற்கு முன்பாக அவர் எத்தனை புரோநோட்டுக்கள் கொடுத்தார் என்றால் அவர் என்னிடம் எதுவும் கொடுக்கவில்லை.

ஷாஜகானுக்கும் உங்களுக்கும் ஏதாவது கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. அந்த கொடுக்கல் வாங்கலின் அடிப்படையில் உறுப்பினர்களிடம் வாங்கிய புரோநோட்டுக்களை உங்களிடம் கொடுத்து வசூல் செய்துகொள்ளும் படி கூறினார் என்றால் சரியல்ல. அந்த வெற்றுபுரோநோட்டுக்களில் கையொப்பம் செய்துள்ள நபர்களின் விபரங்களை ஷாஜகான் சொல்லிதான் எனக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. நீங்கள் அதனால் தான் பிரதிவாதிக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எந்த நோட்டீசும் அனுப்பவில்லை என்றால் நேரில் பலமுறை கேட்டு கொடுக்காததால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினால் பலன் இல்லை என்பதால் அனுப்பவில்லை. மேற்படி சங்கதியை வழக்குரையிலும், வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதி கடக்கால்தோப்பு, செஞ்சி தாலுக்காவை சேர்ந்தவர். மேற்படி விபரம் கூட தெரியாததால் தான் முன்அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த விபரம் எனக்கு தெரியும். பிரதிவாதி எங்கு வேலைசெய்கிறார் என்றால் வெள்ளிக்கிழமை தோறும் சந்தையை நிர்வாகம் செய்கிறார். மற்ற நாட்களில் வேறு என்ன வேலை பார்த்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு இதை தவிர

வேறு வருமானம் வருகிறதா என்றால் அப்பம்பட்டில் வீடுகள் இருப்பதாக கேள்விபட்டேன். அதன் மூலம் வருமானம் வருகிறது. பிரதிவாதிக்கு அப்பம்பட்டில் வீடுகள் எதுவும் கிடையாது வழக்கிற்காக தவறாக கூறுகிறீர்கள் என்றால் நான் கேள்விபட்டதை சொன்னேன்.

வழக்குரையில் பிரதிவாதி வியாபாரம் செய்துவருவதாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சந்தைக்கு சென்று வசூல் செய்வதே வியாபாரம் தான். வசூல் செய்யும் தொகையை மசூதிக்கு தருகிறாரா (அ) அவரே எடுத்துசெல்கிறாரா என்றால் அவர் பங்குதாரர். அந்த தர்காவுக்கு அவர் பங்குதாரர் என்பதற்கான ஆதாரங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை அவரே சந்தையில் செயலாளர் என்று கூறினார். எந்த வருடம் உங்களிடம் மேற்படி தகவலை கூறினார் என்றால் வருடம் எனக்கு ஞாபகமில்லை. ஷாஜகான் முத்தவல்லியாக இருந்தபோது பிரதிவாதி செயலாளராக இருந்தாரா (அ) ஷாஜகான் இறந்தபிறகு பிரதிவாதி செயலாளராக இருந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

வா.சா.ஆ-1 ல் உள்ள பிரதிவாதி கையெழுத்திற்கும், பூர்த்தி செய்த கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான் வித்தியாசமுள்ளது. வா.சா.ஆ-1ல் சாட்சி கையொப்பம் போட்டவர் எனக்கு மாமன் உறவு முறை என்றால் சரிதான். வா.சா.ஆ-1 எழுதிய ஜெயச்சந்திரனும் உங்களுக்கு வேண்டியவர் என்றால் சரிதான். என் வீட்டிற்கு அருகே பிரதிவாதி குடியிருக்கவில்லை. உங்கள் சொத்து இருக்கும் சிங்கவரம் கிராமத்தில் அவருக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சொத்துக்கள் எங்குள்ளது என்றால் கடக்கால்தோப்பில் உள்ளது. எனக்கு கடக்கால்தோப்பில் சொத்துக்கள் எதுவும் இல்லை. பிரதிவாதிக்கும் உங்களுக்கும் எந்தவித பழக்கமும் கிடையாது என்றாலும், ஷாஜகான் கொடுத்த புரோநோட்டுக்களை வைத்து பொய்யாக பிரதிவாதி மீது தாவா தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும் உங்களுக்கும் எநதவித கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றாலும், தாவா புரோநோட்டு உங்களாலும், உங்களுக்கு வேண்டியவர்களாலும் ஜோடிக்கப்பட்ட ஒரு ஆவணம் என்றாலும், தாவா தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).